**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**அசல் வழக்கு எண். 90/2023**

2026ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 05 ஆம் நாள் வியாழக்கிழமை சாட்சியாகிய தமிழரசி **PW1.** இன் வாக்குமூலம், 2023ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 05.02.2026

| | | | |
|---|---|---|---|
| Name | : தமிழரசி | | |
| Father /Husband Name | : தேவதாஸ் | Court | : |
| Village | : பூச்சாத்தனூர் | Taluk | : |
| Calling | : | | |
| Age | : 38/2026 | | |

<u>சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.</u>

**<u>முதல் விசாரணை:</u>**

நான் இவ்வழக்கில் வாதி மற்றும் வாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். வழக்கு விபரங்கள் குறித்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

| **எண்.** | **தேதி** | **ஆவணங்களின் விபரங்கள்** |
|---|---|---|
| 1 | 06.02.2012 | வாதி பெயரில் தரங்கம்பாடி வட்டாட்சியர் வழங்கிய வீட்டு மனை ஒப்படைப்பு ஆணையின் அசல் **வாசாஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 2. | -- | தரங்கம்பாடி நத்தம் சார் ஆய்வாளர் வழங்கிய தாவா சொத்திற்கான வரைபடம் **வாசாஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 3. | -- | தாவா சொத்திற்கான புல வரைபடம் **வாசாஆ 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 4. | -- | வாதி பெயரில் உள்ள வீட்டு வரி ரசீதுகள் (எண்ணிக்கை-2) **வாசாஆ 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| 5. | -- | வாதியின் கணவர் தேவதாஸ் பெயரில் உள்ள மின் பயனீட்டு அட்டையின் அசல் **வாசாஆ 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 6. | -- | வாதியின் கணவர் தேவதாஸ் பெயரில் உள்ள மின் கட்டண ரசீதுகள் (எண்ணிக்கை-2) **வாசாஆ 6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 7. | | வாதி தாவா இடத்தினை அளப்பதற்கு தொகை செலுத்தியதற்கான கணினி ரசீது **வாசாஆ 7**ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 8. | 13.07.2023 | வாதி பிரதிவாதிக்கு எதிராக பொறையார் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததற்கான மனு ரசீது **வாசாஆ 8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |

தாவா சொத்திற்கான புகைபடங்களை தாக்கல் செய்துள்ளேன்.

மேலும் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.